கண்டெய்னர் லாரியில் கருப்புப் பணம்!

அமலாக்கத்துறை முறைகேடு! சி.பி.ஐ விசாரணைக்குத் தயாரா?

புதுக்கோட்டையில் நிர்மலா சீதாராமனுக்கு ஆர்.எஸ்.பாரதி அடுக்கடுக்கான கேள்விகள்!

புதுக்கோட்டை, ஜூலை .6

முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழா பொதுக்கூட்டம் புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் புதுக்கோட்டை வடக்கு ஒன்றியக் கழகம் சார்பில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையிலும், கறம்பக்குடி வடக்கு ஒன்றிய செயலாளர் வெ.முத்துக்கிருஷ்ணன் வரவேற்புரையிலும் கறம்பக்குடியில் நடைபெற்றது.

இதில் பேசிய கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, ஜெ. கருப்பு பணம் கண்டெய்னர் லாரியில் பிடிபட்டது குறித்தும் அமலாக்கத்துறை முறையீடு குறித்தும் கள்ளச்சாராய வழக்கில் பா.ஜ.க. தொடர்பு குறித்தும் சி.பி.ஐ. விசாரணைக்கு தயாரா என நிர்மலா சீதாராமனுக்கு அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பி உரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:

இக்கட்டான நேரத்தில் விழா ஏற்பாடு செய்த செல்லப்பாண்டியன்!

இந்த நெருக்கடியான காலகட்டத்தில் செல்ல பாண்டியன் விழாவை ஏற்பாடு செய்து கொடுத்ததற்கு நன்றி. எனக்கு முன்னால் பேசிய சூர்யா வெற்றி கொண்டான் பேசியது போல அரசியலில் மிக நெருக்கடியான காலம். நான்கு ஐந்து நாட்களாக தமிழ்நாடு அரசியலில் பரபரப்பு ஏற்படுத்தி அகில இந்திய அளவில் இதனை பெரிய பூதாகரமாக்கிக் காட்டுவதற்கு எல்லோரும் முயற்சித்துக் கொண்டிருந்த நேரத்தில் துணிச்சலாக மக்களை சந்தித்துப் பேசுகிற ஒரே கட்சி தி.மு.க. தான் என்பதை நிரூபிக்கின்ற வகையிலே இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறார்.

இதே மாதிரி ஒரு சூழ்நிலை எடப்பாடிக்கு ஏற்பட்டிருந்தால் இவர் கட்சியை கலைத்துப் போயிருப்பார். ஆனால் மக்கள் மீது எங்களுக்கு நம்பிக்கை இருக்கின்ற காரணத்தினால் எதுவாக இருந்தாலும் கலைஞருடைய பாணியில் சொல்ல வேண்டும் என்றால், நம்முடைய நிலைப்பாட்டை எடுத்து விளக்குவது தான் தி.மு.க. வினுடைய கடமை. அதை தொன்றுதொட்டு இன்று வரை அதை தான் தி.மு.க. செய்து கொண்டிருக்கிறது.

இங்கே வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிற விழா. செல்லபாண்டியன் மிக உருக்கமாக சொன்னார் உங்கள் பாதங்களை எல்லாம் தொட்டு வணங்குகிறேன் என்று குறிப்பிட்டார். அதற்கு என்ன காரணம்,இந்த தொகுதி ஒரு சவாலான தொகுதியாக அமைந்துவிட்டது. காரணம் என்னவென்று கேட்டால் நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. போட்டியிடவில்லை. இரண்டாவது தி.மு.க. உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடவில்லை. அதற்கு அடுத்து பார்க்க வேண்டுமேயானால், இது சாதியின் அடிப்படையிலே, மதத்தின் பெயராலே, உள்ளூர் வெளியூர் என்ற பிரச்சனை எல்லாம் வந்த நேரத்தில் இந்த தொகுதியில் இருக்கிற வாக்காள பெருமக்கள் எந்த அளவிற்கு தளபதி மீது நம்பிக்கை வைத்துள்ளார்கள் என்பதை இந்த தேர்தல் முடிவு நாட்டுக்கு - மக்களுக்கு உணர்த்தி இருக்கிறது.

ஒரு வேட்பாளரின் சொந்த ஊரிலேயே, இந்த ஊருக்கு சம்பந்தம் இல்லாத ஒருவரை நிறுத்தி, ஏன் இந்த தொகுதிக்கே சம்பந்தம் இல்லாத ஒருவரை நிறுத்தி வாக்களித்து அவரை வெற்றி பெறச் செய்தார்கள் என்று சொன்னால், இந்த ஒன்றிய,நகர, கிளைக் கழக செயலாளர்கள், கழகத் தோழர்கள் அத்தனை பேரும் எந்த அளவிற்கு உழைத்து இருப்பார்கள் என்பதை நான் கழக அமைப்பு செயலாளர் என்ற முறையில் உணருகிறேன்.

நான் நகர் மன்ற தலைவராக பலமுறை இருந்திருக்கிறேன் ஒவ்வொரு தேர்தலிலும் உள்ளூர் பிரச்சனை எப்படி வரும், சாதி பிரச்சனை எப்படி வரும் இதை எல்லாம் நான் நன்கு அறிவேன். இந்த தேர்தலிலே வேட்பாளர் அறிவிக்கப்பட்டவுடன் நமது செல்லப் பாண்டியனிடத்தில் ஏறத்தாழ தினந்தோறும் தலைமை கழகம் சார்பில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தலைவர் தளபதி அவர்கள் கொடுக்கின்ற அந்த செய்தியினை வைத்துக்கொண்டு அவரிடத்தில் பேசுவேன். எந்தெந்த இடத்தில் எப்படி இருக்கிறது, இந்த மாவட்டத்திலேயே முன்னாள் அமைச்சர் ஆக இருக்க கூடிய விஜய பாஸ்கர் எதையும் செய்யக்கூடியவர், எந்த எல்லைக்கும் போகக்கூடிய ஒருவர். இடத்திற்கு ஏற்றார் போல்பேச்சை மாற்றி பேச கூடியவர். சாதிகாரணை பார்த்தால் ஜாதி என்பார். ஊர் காரனை பார்த்தால் உள்ளூர் என்பார். திமுக காரனை பார்த்தால், திமுகவா போட்டியிடுகிறது என்பார். இப்படி எல்லாம் பேசி, இத்தனையும் சந்தித்து, இந்த கட்சியினுடைய தொண்டன் வெற்றி தேடி கொடுத்திருக்கிறான் என்று சொன்னால், கால காலத்திற்கும் தி.மு.க. உங்களுக்கு நன்றி கடமைப்பட்டிருக்கிறது.

வைராக்கியமாக உழைக்கும் தொண்டர்கள்!

அதிலும் இந்த தொகுதியில் மார்ச்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சென்ற முறை வெற்றி பெற்றது. இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் இந்த தொகுதி மக்கள் தளபதி மு.க.ஸ்டாலின் யாரை அடையாளம் காட்டினாலும் நாங்கள் வாக்களிப்போம் என்ற உறுதியோடு இருப்பதால் தான் வெற்றி கிடைக்கிறது. காரணம் என்ன என்று கேட்டால் நமக்குத் தெரியாத ஒருவரை கொண்டு நிறுத்தினால் கூட அதை வைராக்கியமாக ஏற்றுக்கொண்டு உழைக்கும் தொண்டர்கள் இருக்கும் வரை எவனும் இந்த கழகத்தை தொட்டு பார்த்தாலும் எவனாலும் அசைக்க முடியாது என்கிற உறுதியான நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இந்தத் தேர்தல் மட்டுமல்ல தொடர்ந்து தி.மு.க.விற்கு வாக்களிக்கும் மனப்பான்மை பெற்றவர்கள் தான் இந்த புதுக்கோட்டை மக்கள் என்பதை நான் அறிவேன். குறிப்பாக செல்ல பாண்டியன் அவர்கள் மாவட்ட கழகத்தின் பொறுப்பாளராக 2014-ல் நியமிக்கப்பட்டு, அதன் பிறகு மாவட்ட செயலாளராக தேர்வு செய்யப்பட்டு 8 ஆண்டு காலத்திலேயே அவருடைய பணியை நான் கூர்ந்து கவனித்து வருகிறேன். காரணம் அவர் என்னோடு தலைமை கழகத்தில் நான் சட்டத்துறை செயலாளராக இருந்தபோது, சூர்யாவை போல இவரும் தலைமை கழக வழக்கறிஞராக இருந்தவர். அவர் வந்த காலத்திலிருந்து சோதனை தான்.

அதிக வெற்றியைத் தேடித் தந்தவர் செல்லபாண்டியன்!

தேர்தலை நடத்தியே பழக்கமாகி போச்சு. வந்த உடனே உள்ளாட்சி தேர்தல் எடப்பாடி ஆதிக்கம், உள்ளூர் மந்திரிகள் அட்டகாசம், அத்தனைக்கும் மத்தியிலே உள்ளாட்சித் தேர்தலில் கிராமப்புற ஒன்றிய தேர்தலிலே மிகப்பெரிய வெற்றி பெற்று, 70 முதல் 75 சதவீத உள்ளாட்சிப் பிரதிகளை வெற்றி பெற செய்த கட்சி திராவிட முன்னேற்றக் கழகம். ஆளுங்கட்சியாக எடப்பாடி இருந்த போது 102 ஊராட்சி ஒன்றிய குழு, உறுப்பினர் , சேர்மன், கவுன்சிலர்களை தேர்ந்தெடுத்துக் காட்டியவர் செல்லப் பாண்டியன். அதற்கு அடுத்து சட்டமன்ற தேர்தல் வந்தது. அந்தத் தேர்தலிலும், அவரது தொகுதிக்கு உட்பட்ட, மாவட்டத்திற்குட்பட்ட தொகுதியிலேயே வெற்றி தேடிக் கொடுத்தார். நாடாளுமன்றத்திலும் இந்த தொகுதியில் அதிகமான வாக்குகளை பெற்றுக் கொடுத்திருக்கிறார் என்று சொன்னால், அதற்குக் காரணம் செல்லப் பாண்டியன் என்ற தனி மனிதன் அல்ல. அவருக்கு உறுதுணையாக இருந்த ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், கழகத் தொண்டர்கள் அத்தனை பேரையும் அரவணைத்து சென்று கொண்டிருக்கிறார். எப்பொழுதுமே எந்த ஒரு மாவட்டத்தில், தொண்டர்களை, எந்த ஒரு மாவட்ட செயலாளர் அரவணைத்து செல்கிறாரோ, அந்த மாவட்டத்திலேயே கழகம் மகத்தான வெற்றியை பெரும் என்பதற்கு இந்த புதுக்கோட்டை மாவட்டம் ஒரு எடுத்துக்காட்டாக வழங்குகிறது, என்பதை நான் தலைமை கழகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வெற்றிக்கு யார் யாரெல்லாம் பாடுபட்டார்கள் என்பதை இங்கே செல்லப் பாண்டியன் குறிப்பிட்டார். அதில் குறிப்பாக அறிமுகமே இல்லாத சின்னம் 10 நாள் 15 நாள் தான் இருக்கும் இந்தக் கட்சி தொண்டர்கள் வாக்காளர் மத்தியில் கொண்டு சேர்த்து மூன்று லட்சம் ஓட்டு வித்தியாசத்தில் துரை வைகோவை வெற்றி பெற வைத்திருக்கிறார்கள்.

வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும்!

இங்கு செல்லபாண்டியன் இந்த ஊருக்குத் தேவையானதை சொன்னார். தலைமைக் கழகத்தின் சார்பாக நானும் உறுதி அளிக்கிறேன். அவர் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றித் தருவதற்கு தலைமை கழகத்தின் சார்பில் நானும் முழு ஒத்துழைப்பாக இருப்பேன். உங்களுக்குச் செய்யாமல் வேறு யாருக்கு செய்யப் போகிறோம். எவ்வளவு விசுவாசம், பணம் கிடையாது, வேட்பாளர் அறிமுகம் கிடையாது, சின்னம் தெரியாது, பழக்கமே இல்லாத ஒரு சின்னம் அதற்கு ஓட்டு போட்டு இந்த மகத்தான வெற்றியை தேடி கொடுத்து இருக்கிறீர்கள் என்று சொன்னால் இதற்கு காரணம் முதலில் நான் நன்றி சொல்ல வேண்டியது தாய்மார்களுக்கு தான் என்பதை வெளிப்படையாகவே சொல்கிறேன்.

ஏன் என்று சொன்னால் மூன்றாண்டு காலம் ஆட்சியிலே தளபதி அவர்கள் செய்து இருக்கிற, நிறைவேற்றி இருக்கிற திட்டங்கள் எல்லாம் பெண்களை இந்த அளவிற்கு பயன்படக்கூடிய அளவில் அமைந்திருக்கிறது. எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். ஒரு காரியத்தை பெண்களுக்கு செய்தால் அதனை வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டார்கள் என்பதற்கு எனக்குப் பல உதாரணங்கள் சொல்ல முடியும். காரணம் என்னவென்று சொன்னால் நான் கலைஞர் அவர்களிடம் மிக நெருக்கமாக இருந்தவன். எமர்ஜென்சி காலத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில், கலைஞர் கலந்து கொண்ட மேடையில் நானும் கலந்து கொண்டு பேசியிருக்கிறேன். ஓராண்டு காலம் எமர்ஜென்சி காலத்திலே கலைஞரோடு இருந்து பணியாற்றுகின்ற வாய்ப்பை பெற்றிருக்கிறேன். அப்பொழுது பல அனுபவங்கள் ஏற்பட்டது. அதில் ஒன்றுதான் அவர் பிறந்த நாளான ஜூன் 3ஆம் தேதிக்கு முந்திய நாள் முரசொலியில் கடிதம் ஒன்று எழுதினார். அந்த கடிதத்தை சென்சார் அதிகாரிகள் அப்படியே அழித்து விட்டனர். உடனே கோபப்பட்ட கலைஞர், எமர்ஜென்சி காலத்திலேயே பத்திரிகையில் செய்தி வராது, போட்டோ வராது, ஒரே ஒரு டிவி தான் தூர்தர்ஷன். பல பேருக்கு கலைஞர் உள்ளே இருக்கிறாரா, வெளியே இருக்கிறாரா என்று தெரியாது.

தலைவர் கலைஞர் வழியில் தளபதி!

சென்னை கோபாலபுரத்தில் இருந்து புறப்பட்டு அவரும் நானும் கழகத் தோழர்களும் காரில் வந்தோம். எங்களுக்கே தெரியாது அவர் என்ன செய்யப் போகிறார் என்று, அந்தக் காரில் 9 பேர் சென்றோம். அண்ணா மேம்பாலம் வந்தவுடன் வலது புறம் திரும்பச் சொன்னார். அங்கே தான் சென்சார் ஆபீஸ் இருக்கிறது. அங்கே மறியல் செய்யப் போகிறோம் என்று போலீஸ் குவித்து உள்ளார்கள். கலைஞர் எதையும் சாமர்த்தியமாக செய்து, வெற்றி காணக் கூடிய தலைவர் தான் என்பது அவரை அறிந்தவருக்கு தெரியும். கார் பாலத்தின் வலது புறம் சென்றவுடன் அண்ணா சிலைக்கு அருகில் இறங்கி கழக கொடியை கையில் ஏந்தியவாறு போராட்டம் நடத்தினோம், அந்த வெயிலில் கலைஞர் ஒரு மணி நேரம் போராட்டத்தில் ஈடுபட்டார்.

பின்னர் காவல்துறையினர் எங்களை கைது செய்து போலீஸ் ஜீப்பில் ஏற்றி திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில், ஏழு ஆண்டுகள் முதல்வராக இருந்த கலைஞரை உட்கார வைத்தனர். ஒரு சேர் கூட தரவில்லை. மிகுந்த சோர்வாக கலைஞர் இருந்தார். காவல்துறையின் உயர் அதிகாரிகள் சாவில் நிலையத்திற்க்கு வந்தனர். எனினும் யாரும் கண்டு கொள்ளவில்லை. அப்போது பெண் காவலர் ஒருவர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு காபி கொண்டு வந்து கொடுத்தார். அப்போது உயர் அதிகாரிகளே கண்டு கொள்ளாமல் சென்ற நிலையில் நீ வந்து காபி கொடுக்கிறாயே உனது பதவிக்கு ஏதும் இடையூறு ஏற்பட்டு விடக்கூடாது என்றார். எனக்கு வேலை போனாலும் பரவாயில்லை இந்த பணியில் நான் இருக்கிறேன் என்றால் அதற்கு காரணம் நீங்கள் தான் ஐயா என்றார். அதனால் தான்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் முதல்வர் கழகத் தலைவர் தளபதி

மு.க.ஸ்டாலின் அவர்கள் மகளிர்களுக்காக ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்.

கலைஞர் தனது இறுதி காலத்தில் அண்ணா நினைவிடம் அருகில் அடக்கம் செய்ய வேண்டும் என விரும்பினார். ஒவ்வொரு முறை அண்ணா நினைவிடத்தை கடந்து செல்லும் போதும் கலைஞர் கையெடுத்து கும்பிடுவார். காரணம் முக்கிய முடிவுகளை பேரறிஞர் அண்ணா அவர்கள் கடற்கரையில் தான் ஆலோசித்து எடுப்பார்கள். அப்போது சென்னையில் தலைவர் கலைஞர் அவர்களுக்கு மட்டும் தான் சொந்த வீடு இருந்தது. அவரைப் பற்றி ஏதோ கூறி வருகின்றனர் அயோக்கியர்கள். அண்ணாவுக்குக் கூட வீடு கிடையாது பெரிய அளவில் கட்சி அலுவலகம் கிடையாது. மண்டபங்கள் தங்கும் விடுதிகள் கிடையாது. இந்த சூழ்நிலையில் நிர்வாகிகளை அழைத்து மெரினா கடற்கரையில் முக்கிய முடிவுகளை எடுத்தார்கள் அண்ணா அவர்கள். கலைஞர் மறைந்த போது மெரினா கடற்கரையில் அண்ணா நினைவிடம் அருகே இடம் கேட்பதற்காக விபத்தில் முதல்வரான எடப்பாடியை சந்தித்தோம். தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களே நேரடியாக வந்து கேட்டார்கள். ஐந்து முறை தமிழகத்தில் முதலமைச்சராக இருந்து மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றிய கலைஞருக்கு, பேரறிஞர் அண்ணாவின் தம்பியான கலைஞருக்கு, அண்ணா அவர்களின் திட்டங்களை செயல்படுத்திய கலைஞருக்கு தமிழ்நாட்டை மேம்படுத்திய கலைஞருக்கு, இடம் தர மறுத்து விட்டார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத எடப்பாடி!

மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத எடப்பாடி. மக்கள் ஆதரவே இல்லாதசசிகலா காலில் விழுந்து முதலமைச்சர் ஆன எடப்பாடி இப்படி கூறியதும் நீதிமன்றத்தை நாடினோம். இரவில் வழக்கிற்கு எண் பெறுவதற்காக பெண் அதிகாரி வீட்டிற்கு சென்றோம். அவர் இரு சக்கர வாகனத்தில் நீதிமன்றத்திற்கு வந்து வழக்கு எண் கொடுத்தார்கள். நீங்கள் செய்தது பெரிய உதவி என்று வழக்கறிஞர்களாகிய நாங்கள் எல்லாம் அவர்களிடத்திலே கூறினோம். அதற்கு அவர் சொன்னார் கலைஞரால் தான் என்னை போன்றவர்கள் இந்த இடத்திற்கு வர முடிந்தது என்று கூறினார். இந்த வழக்கில் எதிர்த்து வாதாடுவதற்காக லட்சக்கணக்கில் அரசு பணம் செலவு செய்து டெல்லியில் இருந்து வக்கீலை அழைத்து வந்தவர் தான் எடப்பாடி..

இரவில் இந்த வழக்கை விசாரிக்க என்ன அவசரம்?. நாளைக்கு ஒத்திவைக்க வேண்டும் என அந்த வக்கீல் கூறினார். எதற்கு தெரியுமா?. அடுத்த நாள் சுப்ரீம் கோர்ட்டில் அறுபத்து ஐந்து லட்ச ரூபாய் கொடுத்து வேறு ஒரு வக்கீலை ஏற்பாடு செய்திருந்தார் எடப்பாடி. ஆனால் நீதியரசர் உத்தரவு வழங்கி விட்டார்கள். பெண்களுக்கு எதை செய்தாலும் நன்றி உணர்வோடு இருப்பார்கள் என்பதால் இதனை குறிப்பிடுகிறேன்.

இன்றைக்கு தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் மகளிருக்கு மாதம்தோறும் ரூ.1000 உரிமைத் தொகை வழங்கி வருகிறார்கள். மேலும் விடுபட்டவர்கள் பட்டியலை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. உங்கள் பகுதியில் உள்ள ஏழை மகளிர் விண்ணப்பத்தை பெற்று உரிமைத் தொகையும் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

நாடாளுமன்ற தேர்தலில் ஏழு முறை வாக்கு கேட்டு மோடி தமிழகத்திற்கு படையெடுத்து வந்தார். மக்கள் எதிர்ப்பினால் படு தோல்வியை சந்தித்தார். வாக்கு கேட்டு நாம் சென்றபோது யாருக்கு வாக்களிப்பீர்கள் என வினவியபோது அந்த மகராசனுக்கு அளிக்காமல் வேறு யாருக்கு வாக்களிப்போம் என்றார்கள். பொய் பித்தலாட்டம் பிரச்சாரத்தை தொடர்ந்து கட்டவிழ்த்து விட்டார்கள். முடிவில் மண்ணை கவ்வினார்கள். அத்தனையும் முறியடித்து 40க்கு 40 100 சதவீத வெற்றியை நமது கூட்டணிக்கு பெற்றுத் தந்தவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இந்த வெற்றியை பொறுக்க முடியாமல் கள்ளக் குறிச்சி சம்பவத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இது ஒரு திட்டமிட்ட சதி. பா.ஜ.க.வுக்கும், அ.தி.மு.க.வுக்கும் இதில் தொடர்பு இருக்கிறது என பகிரங்கமாக குற்றம் சாட்டுகிறேன்.

பா.ஜ.க. ஆளுகின்ற பாண்டிச்சேரியில் இருந்து இங்கு மெத்தனால் வரவழைக்கப்பட்டுள்ளது. நிர்மலா சீதாராமன் பேசுவதை பார்த்தால் இந்த சந்தேகம் மேலும் வலுக்கிறது. தி.மு.க.வுக்கும் இதற்கும் தொடர்பு உள்ளது என பேசி இருக்கிறார். நான் நிர்மலா சீதாராமன் மீது பகிரங்கமாக குற்றம் சாட்டுகிறேன். பா.ஜ.க., பா.ம.க. சேர்ந்து கொண்டு எப்படியாவது விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் வெற்றி பெற வைக்க செய்த சதி என்பது தெரிகிறது.

சி.பி.ஐ. விசாரணை கேட்கும் நிர்மலா சீதாராமன் ஆட்சி யோக்கியதை தெரியுமா?. ஜெயலலிதா காலத்தில் 570 கோடி ரூபாய் தேர்தல் நேரத்தில் கண்டைனர் லாரிகளில் பிடிக்கிறார்கள். யாரும் உரிமை கொண்டாடவில்லை. உடனே தி.மு.க. சார்பில் உயர்நீதிமன்றத்தில் நாங்கள் வழக்குத் தொடர்ந்தோம். சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும் என கூறினோம்.

2017-ல் சி.பி.ஐ. இயக்குனரகத்துக்கே சென்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை வைத்தோம். தைரியம் இருந்தால் துணிச்சல் இருந்தால் நிர்மலா சீதாராமன் அல்லது அண்ணாமலையோ பதில் சொல்லட்டும். இதுவரை சி.பி.ஐ. கண்டுபிடித்ததா?. அந்த பணம் யாருடையது?. நிர்மலா சீதாராமனின் துறை அதிகாரியின் யோக்கியதை தெரியுமா. இ.டி.. அமலாக்க துறை அதிகாரி திண்டுக்கல் அருகே வழக்கிலிருந்து ஒருவரை விடுவிக்க லஞ்சம் வாங்கியதால் அந்த இ.டி. அதிகாரியை தமிழ்நாடு போலீசார் கைது செய்தனர்.

கள்ளச்சாராயம் விற்ற பா.ஜ.க. - அ.தி.மு.க.வினர்!

இவ்வளவு கேவலத்தை வைத்துக்கொண்டு அடுத்தவர்களை பார்த்து பேச என்ன யோக்கியதை இருக்கிறது?. சிபிஐ விசாரணை கோரும் எடப்பாடிக்கு திராணி இருந்தால் இதற்கு பதில் சொல்ல முடியுமா?. மக்களை குழப்பத்தில் ஆழ்த்த வேண்டும் என்பதற்காக இப்படி எல்லாம் திசை திருப்பி வருகின்றனர்.

கள்ளச்சாராயம் விற்பனை செய்த பா.ஜ.க. - அ.தி.மு.க.வை சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். யாரை ஏமாற்ற பார்க்கிறீர்கள்?. சட்டமன்றத்தில் தைரியம் இருந்தால் வந்து பேசுங்கள் சவாலை சந்திக்கிறோம் என அழைத்த போது வெளிநடப்பு செய்து ஓடிவிட்டார்.

ஊழல் பழனிசாமியின் யோக்கியதை!

இதே எடப்பாடி முதல்வராக இருந்த போதுதான் குட்கா முறைகேடு செய்து டி.ஜி.பி.க்கே லஞ்சம் கொடுத்ததாக சுகாதாரத்துறை மந்திரி இந்த ஊர் உத்தமபுத்திரன் குட்கா விஜயபாஸ்கர் லஞ்சம் வாங்கி இருக்கிறார். லஞ்ச பட்டியலோடு வழக்குப்பதிவு செய்திருக்கிறார்கள்.

இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரித்து முடித்து விட்டதா. குட்கா ஊழல் பழனிச்சாமி இப்பிரச்சனையை எதிர்க்கட்சியாக இருந்து நமது தளபதி அவர்கள் சட்டசபையில் எழுப்பிய போது பேச விடாமல் தடுத்தவர். குட்கா எடுத்துக்காட்டியதற்காக கழக எம்.எல்.ஏ.க்களை பதவி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுத்தவர்தான் இந்த ஊழல் பழனிச்சாமியின் யோக்கியதை. இதுவரை அனைத்து தேர்தலிலும் நாம் வெற்றி பெற்றுவிட்டோம். இன்னும் ஒன்னரை ஆண்டுகளில் சட்டமன்றத் தேர்தல் வர இருக்கிறது. தேர்தலுக்காக எதையும் செய்ய முன் வருவார்கள்.

ஒவ்வொரு கழகத்தினரும் காவலனாக மாறி செயல்பட வேண்டும். கடந்த காலத்தில் பெற்ற வெற்றியைப் போல 2026 சட்டமன்ற தேர்தலிலும் மாபெரும் வெற்றி பெற அனைவரும் பாடுபட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி பேசினார்.

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் அன்னியூர் சிவாவை ஆதரித்து விக்கிரவாண்டி தெற்கு ஒன்றியம் முட்டத்தூர் ஊராட்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார். உடன் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் சேகர், மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், நாராயணமூர்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

எழும்பூர் சட்டமன்றத் தொகுதி

சேத்துப்பட்டு - தாஸ்புரத்தில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி!

இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. – அதிகாரிகள் ஆய்வு!

சென்னை, ஜூலை 6 - எழும்பூர் தொகுதியில் மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பாக கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய மண்டலத் துணை ஆணையர் ஜே.கே. பிரவீண்குமார் மற்றும் மண்டலம் - 8 மாநகராட்சி அதிகாரிகளோடு 03.07.2024 அன்று நடத்தப்பட்ட கலந்தாய்வுக் கூட்டத்தைத் தொடர்ந்து, எழும்பூர் தொகுதி, வார்டு எண்.108, சேத்துப்பட்டுதாஸ்புரம் பகுதியில் மழைநீர் வடிகால் அமைப்பது தொடர்பாக சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக் கண்காணிப்புப் பொறியாளர், மண்டல அலுவலர், செயற் பொறியாளர், உதவி செயற்பொறியாளர், உதவிப்பொறியாளர் உள்ளிட்ட அதிகாரிகளோடு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாய்வின்போது எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், தெற்குப் பகுதி மாணவர் அணி துணை அமைப்பாளர் அ.குருமூர்த்தி, 108 'அ' வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், 108வது வட்ட இளைஞர் துணை அமைப்பாளர் மணிகண்டன், 108வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜோ.சந்தோஷ்குமார், வட்டச் செயற்குழு உறுப்பினர்கள் பெ.பிரவீண்குமார், ஜி.ராஜரத்தினம், பா.ஆனந்த், பாக முகவர்கள் கு.பிரவீண்குமார், செந்தில் மற்றும் செ.சுந்தர், கே.ஏ.பிரதாப், பெ.பிரேம், ஆர்.வேலு, பு.விஷால், ஜெ.ஜெயகுமார், ஆ.ஜெகன், அ.தினகரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஒதுக்கப்பட்டுள்ள விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம் பொன்னாங்குப்பம் ஊராட்சி பாக எண் 203 – 204 க்கு சம்பந்தப்பட்ட பகுதியில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செய்த சாதனைகளை பொது மக்களிடம் எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்காக வாக்கு சேகரித்தார்கள். உடன் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஒ.ஏ.நாகலிங்கம், உதயமலர் பாண்டியன், ப.சிட்டிபாபு, ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.மகாலிங்கம், ஜி.ரவீந்திரா, பெ.பழனி, சி.என்.சண்முகம், சி.ஜெ.சீனிவாசன், கூளூர் எம்.ராஜேந்திரன், கே.அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், சி.சு.ரவிச்சந்திரன், என்.கிருஷ்ணன், ஆர்த்தி ரவி, வி.வினோத்குமார், எம்.ஜெ.ஜோதிகுமார், டி.ஆர்.கே.பாபு, பி.டி.சந்திரன், டி.கிறிஸ்டி, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் களம்பாக்கம் எம்.பன்னீர்செல்வம், வி.எஸ்.நேதாஜி, பூத் பொறுப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் பலர் உள்ளனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

தாம்பரம் வ. கன்னியப்பன்

ஜூலை 6 (2007)

தாம்பரம் நகரக் கழகச் செயலாளராக இருபத்தைந்து ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றியவர்.

தாம்பரம் நகர்மன்றத் தலைவராக ஐந்தாண்டுகள் பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்தி எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, கறுப்புக் கொடி மற்றும் கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.